[8th September 1970

Raw silk

*85. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether it is a fact that the Handloom Weavers in Tamil Nadu are suffering due to high price and inadequate supply of raw silk ; and

(*b*) if so, the action taken by the Government in this matter ?

கச்சாப் பட்டு

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) கச்சாப் பட்டு போதிய அளவு கிடைக்காததாலும், அதன் உயர்ந்த விலே காரணமாகவும், தமிழ் நாடு கைத்தறி நெசவாளர்கள் அல்லற்படுகின்றனர் என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், இது குறித்து அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) வும் (இ)யும் : 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் கச்சாப் பட்டு விலே ஓரளவு உயர்ந்திருந்தது என்பதும் அதற்குப் பிற்பட்ட திங்கள்களில் அது நிலேயாக உயர்ந்து வந்துள்ளது என்பதும் உண்மையே.

1970-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் கச்சாப் பட்டு விலே கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 210- வரையில் சென்றது. மைசூர் மாநிலத்திலுள்ள சர்க்கார்ப் பட்டு உற்பத்தியாளர்கள் உற்பத்தியைக் குறைத்ததே இதற்கு முக்கிய காரணமாகும். கீழ்க்கண்டுள்ள அனுகூலமான சூழ்நிலேகளால், 1970-ஆம் ஆண்டு ஜூலே திங்களிலிருந்து கச்சாப் பட்டின் விலே கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 162-ஆகக் குறைந்துள்ளது :

(அ) பட்டுத் துணிகள் ஏற்றுமதியில் ஏற்பட்ட சரிவு ;

(இ) போதுமான மழையினுல் கச்சாப் பட்டு உற்பத்தி அதிகரித்தமை ;

(உ) மைசூர் மாநிலப் பட்டு விற்பனேக் கூட்டுறவுச் சங்கம் தனது உறுப்பினர்களுக்கு, கச்சாப் பட்டினே அடகு வைத்தலின்மேல் கடன் வழங்குவதை நிறுத்திவிட்டதாக அறிவித்தது.

திரு. ஜி. சுவாமிநாதன் : கச்சாப் பட்டைப் பொறுத்த வரையில், நாம் மைசூர் மாநிலத்தை முழுவதும் நம்பியிருக்கும் சூழ்நிலே இருக்கிறது. இது சம்பந்தமாக உதகமண்டலத்தில் கச்சாப் பட்டு உற்பத்தி செய்ய வேண்டுமென்று ஒரு ''ஸ்கீம்'' இருந்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. அதைப் போன்ற திட்டத்திற்கு அரசாங்கம் ஏதும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறதா ?

8th September 1970]

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : உதகையைப் பொறுத்த வரையில், என்னிடத்தில் விவரம் இல்லை. தாளவாடி பகுதி, ஓசூர் பகுதிகளில் நாம் பட்டு உற்பத்தி செய்வதற்குத் தேவையான செடிகளை வளர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அதைப் பயன்படுத்திக்கொள்வதற்காக அங்குள்ள மக்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் பண உதவி செய்வதற்கு அரசாங்கம் முடிவெடுத்து வருகிறது.

Industrial Estate

*86. *Q.*—THIRU T. K. SUBBIAH : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Experts Committee visited Ariyalur on 17-4-1970 to explore the possibilities of establishing an industrial estate there; and

(*b*) if so, the details thereof ?

தொழிற்பேட்டை

திரு. டி. கே. சுப்பையா : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 17-4-1970-ல் அரியலூரில் தொழிற்பேட்டை ஏற்படுத்துவது சம்பந்தமாக ஆராய நிபுணர் குழு சென்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ)வும் (இ)யும் : இந்திய அரசினால் அமைக்கப்பட்ட சிறுதொழில் பணி நிறுவனத்தின் வல்லுநர் குழு 1970 ஏப்ரல் திங்களில் அரியலூரில் தொழிற்பேட்டை தொடங்க ஆய்வு நடத்தியது. இப்பணி நிறுவனத்தின் ஆய்வு அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

Thiruvalluvar temple

*89. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state whether there is any proposal to renovate the Thiruvalluvar temple in Mylapore ?

திருவள்ளுவர் கோவில்

திரு. வி. ஈஸ்வாமூர்த்தி : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

மயிலாப்பூரில் உள்ள திருவள்ளுவர் கோயிலைப் புதுப்பிக்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இக்கோவிலின் மேற்கு பக்கத்திலுள்ள உள்ள சுற்றுப்புறச் சுவர், விமானங்கள் தவிர, கோவில் கட்டிடங்கள் பொதுவாக நல்ல நிலையிலேயே உள்ளன. சுற்றுப்புறச் சுவர்கள், கல்யாண மண்டபம் ஆகியவை கட்டுவதற்கான திட்டங்களுக்கும் மதிப்பீடுகளுக்கும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளன. சுற்றுப்புறச் சுவர்கள் கட்டப்பட்டு கல்யாண மண்டபம் குறித்த பணி பாதி நிறை